# "1990 காலப்பகுதிக்குப் பின்னரான மீன்பிடித்துறைமுக அபிவிருத்தியும் இலங்கைப் பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கமும் : பேருவளை மீன்பிடித் துறைமுகம் குறித்த ஓர் ஆய்வு"


**Supervisor**
*Mr. AAM. Nufile,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. MHF. Hajistha,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


## ஆய்வுச் சுருக்கம்


இலங்கையில் மீன்பிடிக் கைத்தொழில் தேசிய உற்பத்திக்கு பிரதான பங்களிப்பை வழங்கி வருகின்றது. இவ்வாய்வானது 1990 காலப்பகுதிக்குப் பின்னரான இலங்கையின் மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியின் போக்கை கண்டறிவதோடு, இலங்கைப் பொருளாதாரத்தில் அது எத்தகைய தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதை இனங்காணுதல் மேலும் பேருவளை பிரதேச மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியின் கடந்தகால தற்கால நிலைகளைக் கண்டறிதல், ஆய்வுப் பிரதேச மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியானது பொருளாதாரத்தில் எத்தகைய தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதனை இனங்காணல், மீன்பிடித் துறைமுகத்தில் எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகளை முன்வைத்தல் ஆகிய இலக்குகளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலாம், இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்தி இவ்வாய்வுக்குத் தேவையான தரவுகள் பெறப்பட்டன. முதலாம் நிலை தரவுகள் பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் தொழில் புரியும் மீனவர்கள் 100 பேர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டதுடன், அவதானம், கலந்துரையாடல் முறை போன்றன மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் களுத்துறை மாவட்ட கடற்றொழில் காரியாலயத்தின் பதிவேடுகள், புள்ளி விபரங்கள் என்பவற்றினூடாகவும் இணையத்தளம் மற்றும் நூல் பதிப்புக்கள் என்பவற்றினூடாகவும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

இவ் ஆய்வில் மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியின் போக்கானது சுனாமிக்குப் பின்னரே சிறப்பானதோர் அடைவை எட்டியுள்ளது எனலாம். இதன் விளைவாக உட்கட்டமைப்பு விருத்தி, மீன்பிடியுடன் தொடர்புடைய துணைச் சேவைகள் வளர்ச்சி ஏற்பட்டு பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேநேரம், மீன்பிடித் துறைமுகத்தில் எதிர்நோக்கும் பிரதான சவாலாக மீன்பிடித் துறைமுக மாசாக்கம் விளங்குகின்றது. எனவே இதனைத் தீர்ப்பதற்கான சிறந்த வழி முறையான கழிவுகற்றல், கழிவுகளின் மீள்பயன்பாடு என்பன விளங்குகின்றன.

எனவே, மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்தியினால் ஏற்படும் பொருளாதாரச் சாதகத் தன்மைகளை அறிந்து கொள்ள இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை இவ் ஆய்வு வலியுறுத்துகிறது.



பிரதான சொற்கள்: மீன்பிடித் துறைமுகம், சுனாமி மற்றும் உட்கட்டமைப்பு விருத்தி